**ஊழியர் சேமலாப நிதியம் - 2017**

---

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான மற்றும் மற்றும் செலவினக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, ஊழியர் சேமலாப நிதியத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம், எதிர்காலத்தில் பொருளாதார நலன்கள் நிறுவனத்தை வந்தடையும் எனும் அடிப்படையில் மாத்திரமே சொத்தாக ஒன்றை இனங்காண முடியுமாயினும், அதனைக் கருத்திற் கொள்ளாது 2 மூலதன விடயங்களின் கீழ் இயந்திரப் பழுதுபார்த்தல் செலவினமாகிய ரூபா 1,029,145 மற்றும் வாகனப் பழுதுபார்த்தல் செலவினமாகிய ரூபா 3,172,415 என்பன மீளாய்வாண்டின்போது மூலதனமாக்கப்பட்டிருந்தன. மேலும், வாகனப் பழுதுபார்த்தலுக்கு 2013 தொடக்கம் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட செலவினம் 20 சதவீத தேய்மானத்திற்குள்ளாகியமையால் மீளாய்வாண்டின் தேய்மானத்திலும் ரூபா 1,804,446 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகிய ரூபா 209,264,405 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தபோதும் அதற்கமைவான மதிப்பிடப்பட்ட வழுவானது 08 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், கணனி மென் அணிகள் நிதியத்தின் சொத்துக்களாக காட்டப்பட வேண்டியபோதும், 2017 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,626,366 பெறுமதியான மென் அணிகள், கணனிகள் மற்றும் துணைப்பாகங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட போலிச் சொத்துக்கள் 2 ஆண்டுகளுக்குள் காலக்கழிவுக்குள்ளாக வேண்டும் என்பது நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கையாக இனங்காணப்பட்டிருந்தபோதும், அதற்கு முரணாக அச்சொத்துக்கள் 4 ஆண்டுகள் பூராகவும் காலக் கழிவுக்குள்ளாகியிருந்தன.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவை வழங்குபவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதன் மூலம் அறவிடப்பட்டு தீர்வு செய்யப்படும் வரை தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒவ்வொரு மாவட்ட தொழில் அலுவலகங்களது பொது வைப்புக் கணக்குகளிலிருந்த பங்களிப்புத் தொகையான ரூபா 100,583,388 நிதியத்தால் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) நிதியத்தின் அங்கத்தவர் நிதியத்தில் தொழில் ஆணையாளரது பெயரில் கணக்கொன்றை நெடுங்காலமாக பேணி வரும் சேவை வழங்குபவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்ததுமான ரூபா 10,756 மில்லியன் மற்றும் அவ்வாறு வழக்குத் தொடரப்பட்டு அறவீடு செய்யப்பட்டு தீர்வு செய்யப்படும் வரை பொது வைப்பு கணக்கிலிடப்பட்டு 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 378 மில்லியனாகவிருந்த தொகை என்பவற்றை ஒவ்வொரு அங்கத்தவரது கணக்கிலும் செலவு வைப்பதற்கு இவ்வறிக்கைத் தினம் வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நலன் மற்றும் உரித்துக் கோரப்படாத நலனாக ரூபா 779 மில்லியனும் குறைந்த, கூடிய பங்களிப்புத் தொகையாக அங்கத்தவர் நிதியத்தில் காட்டப்பட்ட ரூபா 1,647 மில்லியனும் அங்கத்தவர் நிதியத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தபோதும், அம்மீதியை இனங்கண்டு அதனை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக மேற்கொண்டும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 பெப்ரவரி 06 ஆந் திகதிய அரச கணக்கீட்டுக் குழுவின் பரிந்துரையினது 7(ii) ஆம் இலக்கத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட ரூபா 10,756 மில்லியனைத் தீர்வு செய்யும் நடவடிக்கை துரிதப்படுத்தப்படக் கூடியவாறான புதிய கணனி மென் அணி ஒன்றை அறிமுகஞ் செய்வதில் ஈடுபட்டுள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் குழுவிற்கு அறிவித்திருந்தபோதும், இவ்வறிக்கைத் தினம் வரை கணனி மென் அணி ஒன்று அறிமுகஞ் செய்யப்படாதிருந்தது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 8,142 மில்லியன் ஆகவிருந்த அம்மீதியானது முறையே 2016, 2017 ஆம் ஆண்டுகளின் இறுதியில் ரூபா 10,979 மில்லியன் மற்றும் ரூபா 10,756 மில்லியன் என ஆகியிருந்தமையால் அம்மீதி அதிகரிக்கும் நிலைமை தென்பட்டது.

(ii) மேலே குறிப்பிடப்பட்டவாறு பொது வைப்புக் கணக்கிலிருந்த ரூபா 377,716,250 அங்கத்தவர்களது கணக்குகளில் செலவு வைக்கப்படாமையால் அங்கத்தவர்களைச் சேர வேண்டிய வட்டியும் இழப்பிற்குள்ளாகி இருந்தது.

(iii) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தி வைத்த நலன் மற்றும் உரிமை கோரப்படாத நலன் எனக் காட்டப்பட்டிருந்த ரூபா 779 மில்லியன் மற்றும் குறைந்த, கூடிய பங்களிப்புத் தொகைக் கணக்கின் மீதியாகிய ரூபா 1,647 மில்லியன் மீதி என்பவற்றைத் தீர்வு செய்யுமாறு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் அரச கணக்குக் குழுவினால் தொடர்ந்து பணிப்புரை மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராததுடன், வருடாந்தம் இம்மீதி அதிகரித்துச் செல்வதாலும் வட்டி இழப்புக்குள்ளாவதாலும் இம்மீதியைத் தாமதமின்றி தீர்வு செய்வதற்கான விதிமுறைகளைத் தயாரிப்பதில் நிதியம் கவனம் செலுத்த வேண்டியமை அத்தியாவசியமானதாகும் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சேர்ந்து நின்ற செலவினம் ரூபா 1,946,676 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) நிதியம் பேணி வரும் 7 வங்கிக் கணக்குகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வங்கிக் கணக்கிணக்கத்தில் வழங்கப்பட்டு கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள், வைப்பிலிடப்பட்டு கொடுப்பனவு மறுக்கப்பட்ட வைப்புகள், வைப்பிலிடப்பட்ட காசோலைகள், காசேட்டில் பதிவு செய்யப்படாத காசு வைப்புகள், நேரடி வரவு / செலவு மற்றும் இனங்காணப்படாத ஏனைய மீதிகளாக ரூபா 1,413,749,124 மற்றும் வைப்பிலிடப்பட்டு தேறாதுள்ள, காசு / காசுக் கட்டளை, தேறாத காசோலைகள் மற்றும் வழங்கப்பட்டு கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதுள்ள காசோலைகள் என ரூபா 1,479,240,883 கூட்டுத்தொகையாகக் காட்டப்பட்டிருந்தபோதும், இம்மீதிகளை இனங்கண்டு சீராக்கல்களை மேற்கொள்வதற்கு இவ்வறிக்கைத் தினம் வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கணக்கீட்டு வழுவொன்றின் காரணமாக உருவாகிய ரூபா 285,108,000 வருமான வரி மீதி மீளாய்வாண்டில் திருத்தம் செய்யப்படாது தொடர்ந்தும் நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 நிலையான சொத்துக்களது மீதி ரூபா 881,432,176 ஆகியபோதும், சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் அம் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 537,780,607 ஆகியமையால் ரூபா 343,651,569 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலற்றவாறிருந்த 2 வங்கி நடைமுறைக் கணக்குகளது வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீதி ரூபா 69,755 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களில் இதனை ரூபா 6,810,000 ஆகக் காட்டியமையால் நிதிசார் மீதியில் ரூபா 6,740,245 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் விடயங்களுக்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா ‘000 | |
| (i) | திறைசேரி உண்டியலில் முதலீடு | 69,783,696 | • முதலீட்டுக்கான பரிந்துரை, முதலீட்டுக் குழுவினதும் நிதிச் சபையினதும் அங்கீகாரம் என்பன |
| (ii) | பங்கு முதலீடு, நிரல்படுத்தப்பட்ட | 74,042,107 | • பங்குப் பதிவேடு<br>• பிரிவு வாரியான பட்டோலைகள் |
| (iii) | பங்கு முதலீடு, நிரல்படுத்தப்படாதன | 10,270,625 | • பங்குச் சான்றிதழ்<br>• பங்குப் பதிவேடு<br>• பிரிவு வாரியான பட்டோலைகள்<br>• மீதிகளது உறுதிப்படுத்தல் |
| (iv) | நிலையான வைப்புகள் | 48,000,000 | • நிலையான வைப்புகளில் முதலீடு செய்வதற்கு நிதிச் சபை வழங்கிய விசேட அங்கீகாரத்தை வழங்கிய நிதிச் சபைப் பத்திரம்<br>• மீதிகளது உறுதிப்படுத்தல்<br>• முதலீட்டுக் குழுத் தீர்மானங்கள் |
| (v) | கடன் பத்திரம் | 5,349,207 | • கடன் பத்திரச் சான்றிதழ்<br>• முதலீட்டுக் குழுவினதும் நிதிச்சபையினதும் அங்கீகாரம் |
| (vi) | நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ் | 2,746,076 | • நம்பிக்கை பொறுப்பு சான்றிதழ்கள்<br>• முதலீட்டுக் குழுவினதும் நிதிச் சபையினதும் அங்கீகாரம்<br>• மீதிகளது உறுதிப்படுத்தல் |
| (vii) | ஏனைய வருமானம் - தண்டப் பணமும் ஏனைய திணைக்களங்களும் | 587,600 | • விரிவான பட்டோலை |
| (viii) | சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் (கிரயம்) | 309,219 | • நிலையான சொத்துப் பதிவேடு |
| (ix) | பொதுத் திறைசேரியிடமிருந்து பெற வேண்டிய “மெஹெவர பியச” தொகை | 377,147 | • மீதிகளது உறுதிப்படுத்தல் |
| (x) | தொழில் ஆணையாளர் நாயகம் - கட்டு நிதி | 534,034 | • மீதிகளது உறுதிப்படுத்தல்<br>• பட்டோலை |
| (xi) | கொடுப்பனவு செய்ய வேண்டிய நலன்கள் | 170,999 | • விரிவான பட்டோலை |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவு மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களது சேவை உழைப்பிலான வருமானத்தில், வருமானத்தின் மீதான உழைக்கும்போதே செலுத்தும் வரியானது குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது மீளாய்வாண்டின்போது நிதியம் செலுத்தியிருந்த தொகை ரூபா 17,915,000 ஆகும். 2016 ஆம் ஆண்டில் வரவு, செலவுத் திட்ட அறிவுறுத்துரைகள் மற்றும் அரச நிதி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி சரியான விதிமுறைகளையும் நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கைகளையும் தயாரிக்குமாறு 2016 பெப்ரவரி 26 ஆந் திகதிய அரசாங்கக் கணக்குக் குழுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டபோதும், அவ்வாறானதொரு நடவடிக்கை 2018 யூலை இறுதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 395(ஆ) மற்றும் (இ) | நிதியத்தின் நேரடி வரவு, செலவுகளுக்கெனப் பேணப்படும் வங்கிக் கணக்கிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 570 | மெஹெவர பியச கட்டிடத்திற்கெனப் பெறப்பட்ட முற்பணமாகிய ரூபா 813,686 மற்றும் ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய கணக்குகளின் பொருட்டு நிறுத்தி வைத்திருந்த ரூபா 450,530 என்பன முறையே 03 ஆண்டுகளையும் 02 ஆண்டுகளையும் கடந்திருந்த போதும், அவற்றைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது 2 பொது வைப்புக் கணக்குகளில் இடப்பட்டிருந்தன. |
| (இ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள ரூபா 185,330,000 பெறுமதியாக சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றின் பொருட்டு 2017 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்பை மேற்கொண்டு அவ்வறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) தொழில் திணைக்களச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 2007 ஒக்டோபர் 31 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | மஹரகம மாவட்டத் தொழில் அலுவலக தொழில் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனை அறிக்கைகள் 86 சந்தர்ப்பங்களில் பரிசீலனைத் தினத்திலிருந்து 10 நாட்களுக்கும் 30 நாட்களுக்கும் இடையேயான காலதாமதத்தின் பின்னரும் 284 சந்தர்ப்பங்களில் 30 நாட்களுக்கு மேற்பட்ட கால தாமதத்தின் பின்னரும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. |
| (ii) | 2002 மே 20 ஆந் திகதிய 08/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை | பதிவு இலக்கம், நிறுவனத்தின் பெயர், முகவரி, வியாபாரத்தின் தன்மை, ஊழியர்களது எண்ணிக்கை, இறுதியாகப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்ட திகதி என்பவற்றை உள்ளடக்கிய நிறுவனப் பதிவேடு ஒன்றைப் பேணுவதற்கு மஹரகம மாவட்ட தொழில் அலுவலகமும் மத்திய கொழும்பு மாவட்ட அலுவலகமும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. |
| (iii) | 1999 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/99 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 2016 யூன் தொடக்கட் 2017 யூலை வரையான காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளின் போது, மஹரகம மாவட்ட தொழில் அலுவலகம் முதல் அறிவிப்பை அனுப்பி 14 நாட்கள் கடந்திருந்தபோதும், சிகப்பு அறிவுறுத்தல்களை அனுப்பியிராத 33 சந்தர்ப்பங்களும் சிகப்பு அறிவித்தலை அனுப்புவதற்கு 27 முதல் 283 நாட்கள் கடந்த 67 சந்தர்ப்பங்களும் புலனாகின. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதியப் பெறுபேறு ரூபா 202,947 மில்லியன் நிகர இலாபமாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 175,927 மில்லியன் நிகர இலாபம் ஆகியமையால் ரூபா 27,020 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின்போது வட்டி வருமானம் ரூபா 22,861 மில்லியன் அதிகரித்தமையே மேற்படி நிதிப் பெறுப்பேற்றின் அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 ஆம் ஆண்டில் ரூபா 125,610 மில்லியனாகவிருந்த நிதியத்தின் நிகர இலாபம் மீளாய்வாண்டளவில் ரூபா 202,947 மில்லியன் வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்குரிய தேய்மானம் என்பவற்றை மீளச் சீராக்கல் செய்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 136,299 மில்லியனாகவிருந்த நிதியத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 222,730 மில்லியன் வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

### 3.2 நிதியம் ஆரம்பித்துள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

நிதியமானது ரூபா 10,050,779,371 பங்களிப்புத் தொகை மற்றும் தண்டப்பணம் என்பவற்றை அறவிடுவதற்கு வெளி நிறுவனங்களுக்கெதிராக 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீவடங்கிலும் உள்ள நீதிமன்றங்களில் 9030 வழக்குகளைத் தொடுத்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவின் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் மேம்பாடு சம்பந்தமாக ரூபா 8 மில்லியன் மதிப்பீட்டில் தொலைக்காட்சி அறிவித்தல்களை உருவாக்குவதற்கும் 2 தொலைக்காட்சி அலைவரிசைகளினூடாக மாதம் முழுவதும் 80 தடவைகள் அறிவித்தல்களைப் பிரசாரப்படுத்துவதற்குமெனத் திட்டமிட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின்போது தொலைக்காட்சி அறிவித்தல்களை உருவாக்குதல் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

(ஆ) புகைப் படங்களையும் கைவிரல் அடையாளங்களையும் பெற்றுக்கொள்ளும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 17 மில்லியன் மதிப்பீட்டில் 100,000 அங்கத்தவர்களது கைவிரல் அடையாளங்களைப் பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், அச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததுடன், திணைக்களத்தின் 50,000 உத்தியோகத்தர்களது கைவிரல் அடையாளங்களைப் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், 12,600 உத்தியோகத்தர்களது கைவிரல் அடையாளங்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்தன.

(இ) இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினது 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முதலீடுகள் மற்றும் நிதிய முகாமைத்துவம் சம்பந்தமாக ஆராய்ச்சி அறிக்கையை சமர்ப்பித்தல், தகவல் தொழில்நுட்ப பிரிவினது அனுசரணையுடன் கணக்கீடு மற்றும் முதலீட்டு மென் அணி (SAP System) முன்னேற்றம், ஊழியர் சேமலாப நிதியத்தின் புதிய வசதிகள் தொடர்பாக தொலைக்காட்சி மற்றும் புதினப் பத்திரிகை அறிவித்தல் பிரசாரங்களை மேற்கொள்ளுதல் மற்றும் தொழில் வழங்குனர்களதும் தொழில்புரிவோரதும் வழிகாட்டலுக்காக விரிவாக நாளதுவரையாக்கிய கைநூல் ஒன்றைப் பிரசுரிப்பதற்குமான பணிகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டபோதும், அப்பணிகள் மீளாய்வாண்டின்போது நடைபெறவில்லை.

### 4.2 நிதிய முதலீடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) “2015 பெப்ரவரி 01 தொடக்கம் 2016 மார்ச் 31 வரையான காலப்பகுதியின்போது திறைசேரிப் பிணை முறி வெளியீடு தொடர்பாக பரீசீலித்தல் மற்றும் விசாரணை செய்யும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினது அறிக்கையின் 32 ஆம் இலக்கம் - “Determination and Reports on issues stated in the Mandate” (880 - 910 ஆம் இலக்கப் பக்கங்கள்) என்பதன் கீழ் Perpetual Treasuries கம்பனியானது 07 திறைசேரிப் பிணை முறிகளின் மூலமான கொடுக்கல் வாங்கல்களின்போது ரூபா 11,145,221,480 மொத்த நிகர தொகையைப் பெற்றுக் கொண்டதாக

அறிவித்திருந்ததுடன், அதில் ரூபா 8,529,964,496 நிகர தொகையை ஊழியர் சேமலாப நிதியம் உள்ளடங்கலாக அரச நிறுவனங்களினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையின் 33 ஆம் அத்தியாயத்தினது 15 ஆம் (911-922 ஆம் பக்கங்கள்) பரிந்துரையின் படி ஊழியர் சேமலாப நிதியம் ஈடுபட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் மேற்கொண்ட விசாரணைகளின்போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஏதாவது நட்டம் ஏற்பட்டுள்ளதா என்றும், அவ்வாறாயின் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பது மற்றும் அப்பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அந்த நட்டத்தை அறவீடு செய்தல் போன்றவற்றைப் பரிசீலிப்பதும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே, ஊழியர் சேமலாப நிதியத்தின் பொருட்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்துவதில் வரப்பிரசாதம் பெற்றவர்கள் யார் என்பதும் நேர்மையற்றவாறு செயற்பட்டுள்ள நபர்கள் யார் என்பதைக் கருத்திற் கொள்ளுமாறும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதியமும் வேறு இரு அரச நிறுவனங்களும் இணைந்து ரூபா 12 பில்லியன் மொத்த கிரய மதிப்பீட்டின் கீழ் புதிதாக நிர்மாணிப்பதற்கிருந்த உத்தேச ஹோட்டல் கூட்டுத் தொகுதி கம்பனி ஒன்றின் முதலீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் இறுதியில் நிதியத்தின் ரூபா 5 பில்லியனை அதற்காகப் பயன்படுத்தியுமிருந்தது. அதன் பொருட்டு 2013 யூன் 04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட பங்குதாரர்களது உடன்படிக்கைப் பிரகாரம் இக்கம்பனியின் பங்குகள் 2015 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பங்குச் சந்தையில் நிரல்படுத்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், நிர்மாணப் பணிகள் தாமதமடைந்ததால் அந்நடவடிக்கை 2018 யூன் இறுதியளவிலும் முடிவடையாதிருந்தது. இதன் காரணமாக, முதலீடு செய்யப்பட்ட நாள் முதலாக நிதியம் இலாபம் எதனையும் பெற்றிருக்கவில்லை.

இலங்கை மத்திய வங்கி பிரதி ஆளுநரது கருத்துப்படி குறித்த கம்பனியின் நிர்மாணப் பணியை இடை நிறுத்தி அதனை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறித்த ஹோட்டல் கம்பனி அறிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) நிதியமானது SriLankan Airlines, The Finance Company PLC மற்றும் Galadari Hotels (Lanka) PLC எனும் கம்பனிகளில் 31 மில்லியன் பங்குகளில் முதலீடு செய்திருந்த தொகை ரூபா 1,516 மில்லியனாகும். முதலீடு செய்த நாள் முதலாக இலாபம் எதனையும் பெற்றிருக்கவில்லை. மேலும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்முதலீடுகளது சந்தைப் பெறுமதி ரூபா 216 மில்லியன் ஆகியமையால் கணிப்பிடப்பட்ட இழப்பு ரூபா 1,300 மில்லியனாகும். Srilankan Air Lines மற்றும் The Finance Company ஆகியவற்றில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட் சந்தர்ப்பத்திலும் அவை நட்டத்தில் இயங்கியவாறிருந்த கம்பனிகளாக இருந்தமை கணக்காய்வில் புலனாகியது.

(ஈ) நிதியமானது 2013 ஆம் ஆண்டில் PC House கம்பனியின் 11 மில்லியன் பங்குகளில் ரூபா 44 மில்லியன் முதலீட்டை மேற்கொண்டிருந்த போதும், முதலீடு செய்த நாள் முதலாக நிதியம் நலன் எதனையும் பெற்றிராததுடன், அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலும் கம்பனி நட்டத்தில் இயங்கியவாறிருந்தமையும் புலனாகியது. மேலும், 2016 ஆம் ஆண்டில் அப்பங்குகளை விற்பனை செய்ததன் மூலம் நிதியத்திற்கு ஏற்பட்ட உள்ளவாறான இழப்பு ரூபா 43 மில்லியன் ஆகும்.

**4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது கொழும்பு மேற்கு மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் சிலர் நேரடியாக அரச வங்கி ஒன்றினூடாக 63 அங்கத்தவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்தை பிணையாகப் பெற்றுக்கொண்டு வீடமைப்புக் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய வீடமைப்புக் கடன் பிணை மீதிச் சான்றிதழ்களது மொத்தப் பெறுமதி ரூபா 63,169,974 ஆகும்.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் (திருத்தம்) அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவின் பிரகாரம், அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத் தொகையாகச் செலவு வைக்கப்பட்டுள்ள பணத்தில் 30 சதவீதத்தை வீடமைப்பு மற்றும் மருத்துவ உதவிக்காகப் பெறுவது 2015 மே மாதம் தொடக்கம் ஆரம்பமாகியிருந்தது. அதற்கமைய, ஆரம்ப நலன் கொடுப்பனவாக 2015 முதல் 2017 வரை ரூபா 58,300 மில்லியன் கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், அங்கத்தவர்கள் இதன் மூலம் பெறும் பணம் குறித்த பணிக்கே செலவிடப்படுகின்றதா என்பதைத் தொடர்ந்து அறவிடுவதற்குத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்படி திருத்த அதிகாரச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிராததால் அத்தொகையை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புள்ளமை அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் தனியார் துறையிலும் அரைப்பங்கு அரசாங்கத் துறையிலும் பணியாற்றுபவர்களாக அறிக்கையிடப்பட்டுள்ள 3,799,628 பேர்களது ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்பை பெற்றுள்ளோரது சுழற்சி ரீதியிலான அங்கத்தவர்களது எண்ணிக்கை 69 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 2,626,169 நபர்களாகும். ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களில் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள பணியாளர்களது எண்ணிக்கை 11 சதவீதமே ஆவதால் எஞ்சிய 20 சதவீதமானோர் எந்த நிதியத்திலும் பங்களிப்பின்றி இருப்பதுடன் அவர்களுக்கு நிதியத்தில் அங்கத்துவத்தை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவுமில்லை.

**4.4 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த தினத்தில் பங்களிப்புத் தொகையை செலுத்தாமலிருக்கும் தொழில் வழங்குபவர்களிடமிருந்து அத்தாமத காலத்திற்கான தண்டப் பணத்தை அறவிடுவதற்கான கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், இலங்கை மத்திய வங்கியினது தரவுத் தொகுப்பு முறைமையில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளின்போது 2000 முதல் 2017 செப்டெம்பர் வரை மஹரகம மாவட்ட தொழில் அலுவலகத்திற்குரிய 8 நிறுவனங்களில் தாமத காலத்திற்கான ரூபா 39,392,187 தண்டப் பணமும் மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்துக்குரிய 14 நிறுவனங்களில் 2017 ஒக்தோபர் 25 இல் உள்ளவாறு தாமத காலத்திற்கான ரூபா 119,850,759 தண்டப்பணமும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை புலனாகியது.

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்துவதால் பெறும் வருமானத்தில் ஆண்டொன்றிற்கு இரண்டரைச் சதவீதத்திற்குக் குறையாத வட்டியை நிதிச் சபை வருடாந்தம் ஒவ்வொரு அங்கத்தவரது கணக்கிலும் செலவு வைக்க வேண்டும். 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் அவ்வாறாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட சதவீத வட்டியைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2009 முதல் 2014 வரை 13.75 சதவீதம் முதல் 10.5 சதவீதம் வரை கிரமமான வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன், முன்னைய மூன்று ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் அது 10.5 சதவீதமாகக் கிரமமாக வீழ்ச்சி அடைந்திருந்தது. முன்னைய 3 ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் அது சமமான 10.5 சதவீத அடிப்படையில் இருந்தது.

**4.5 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்துதல்**

---

தேவைகளை முறையாக இனங்காணாது வருடாந்த மதிப்பீட்டைத் தயாரிப்பதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் 09 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 13 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை சேமிப்புக்குள்ளானது.

**4.6 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

2007 நவம்பரில் ரூபா 21,884,084 கிரயத்தில் நிதியம் அச்சிடும் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்திருந்தது. எனினும், அதன் அதி கூடிய ஆற்றல் பயன்படுத்தப்படாது வெளி நிறுவனம் ஒன்றின் மூலம் அச்சிடும் வேலைகள் நடைபெற்றிருந்ததுடன், ABH மாதிரிப் படிவத்தை அச்சிடுவதற்கு மாத்திரம் 2013 முதல் 2016 வரையான காலப்பகுதியின்போது ரூபா 32,324,470 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.7 ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

---

மீளாய்வாண்டின்போது தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான 16 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கு 23 சந்தர்ப்பங்களில் நிதியத்திலிருந்து ரூபா 1,298,638 செலவிடப்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் சேமலாப நிதியத்தின் இலங்கை மத்திய வங்கிப் பதவியணிக்கு நிதிச் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி இல்லாதிருப்பதுடன் 2015 ஆம் ஆண்டின்போது 159 ஆகவிருந்த உள்ளவாறான பதவியணி மீளாய்வாண்டு இறுதியின்போது 176 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிதியத்துடன் தொடர்புடைய தொழில் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 303 ஆகவும் உள்ளவாறான பதவியணி 200 ஆகவும் ஆகியிருந்ததுடன், அதற்கமைய, 103 வெற்றிடங்கள் நிலவின. நிறைவேற்று தரத்தில் 09 வெற்றிடங்களும் நிறைவேற்று தரம் அல்லாதவற்றில் 93 வெற்றிடங்களும் இதில் உள்ளடங்கியிருந்தன. சிரேஷ்ட பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுவதால் நிதியம் தீர்வுகளை மேற்கொள்வதிலும் சட்ட பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அடங்கலான நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் நேரடியாகவே தாக்கத்தை விளைவிக்காது எனக் கணக்காய்வில் கூறுவதற்கில்லை.

(இ) நிதியத்தின் 2017, 2016 ஆம் ஆண்டுகளுக்கான தனி நபர் கிரயம் பின்வருமாறு

| | 2017 ஆம் ஆண்டு | | 2016 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| | **தொழில் திணைக்களம்** | **இலங்கை மத்திய வங்கி** | **தொழில் திணைக்களம்** | **இலங்கை மத்திய வங்கி** |
| சம்பளக் கிரயம் (ரூபா'000) | 387,855 | 459,475 | 383,175 | 477,974 |
| உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை | 805 | 176 | 812 | 184 |
| தனி நபர் கிரயம் (ரூபா'000) | 482 | 2,611 | 472 | 2,598 |
| தனி நபர் கிரயததில் மாற்றம் (ரூபா'000) | | 2,129 | | 2,126 |

ஊழியர் சேமாலப நிதியத்தின் தொழில் திணைக்களத்தின் தனி நபர் கிரயத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவின் தனி நபர் கிரயம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,126,000, 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,129,000 என அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. தொழில் திணைக்களத்தினதும் இலங்கை மத்திய வங்கியினதும் சம்பள வேறுபாடுகளே இதற்கான பிரதான காரணமாகும்.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயலாற்ற வேண்டுவதுடன் மீளாய்வாண்டின் பொருட்டு ஊழியர் சேமலாப நிதியம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுவது என அறிந்திராமையால் அப்பணிகளுக்கான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை அடைவதற்கான வழிவகைகளையும் இலக்கு அடையப்பட்டமையை அளவிடுவதற்கான அளவு கோல்களையும் இனங்காண்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநரது கருத்துப்படி நிறுவனமென்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கி இது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஒரு திணைக்களமாகிய ஊழியர் சேமலாப நிதியத்தின் பணிகள் அந்த நோக்கங்களிலும் இலக்குகளிலும் நேரடியாகத் தொடர்பற்றவை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கணக்காய்வுக் குழு

நிதியத்திற்குரிய கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் தொழில் அமைச்சின் கீழ் சகல நிறுவனங்களுடனும் ஒரு சேர நடாத்தப்படுகின்றது. அதற்குப் புறம்பாக, தொழில் திணைக்களத்தின் கீழ் பிறிதாக ஒரு கணக்காய்வுக் குழு நடாத்தப்படுகின்றபோதும், அதற்கு நிதியத்தின் நிதிசார், நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இலங்கை மத்திய வங்கி மற்றும் அதன் உள்ளகக் கணக்காய்வாளர்களின் பங்குபற்றுதல் இல்லாதிருந்தது.

ஏறக்குறைய ரூபா 2,066 பில்லியன் உள்ள இந்த நிதியத்தின் பொருட்டு வேறானதொரு கணக்காய்வுக் குழுவை நிதிய நடவடிக்கைகளுடன் இணைத்து தொழில் திணைக்களத்தினதும் இலங்கை மத்திய வங்கியினதும் உத்தியோகத்தர்களது பங்குபற்றலுடன் நடாத்த வேண்டியமைக்கான அவசியத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

## 6.2 பொருட் கொள்வனவு

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் பொருட்டு பொருட் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், 2006 பொருட் கொள்வளவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) பந்தியின் பிரகாரம், அது காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டிராததுடன், முகாமைத்துவச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், A மற்றும் H பத்திரங்களைக் கணனிமயப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் சேவை, ABH மாதிரிப் படிவங்கள் மற்றும் கடன் 14 மாதிரிப் படிவங்களை அச்சிடுதல் மற்றும் வீடமைப்புக் கடன் மாதிரிப் படிவம் மற்றும் ஏனைய மாதிரிப் படிவங்களை அச்சிடுதல் போன்ற ரூபா 27,041,800 பெறுமதியுடைய பொருட் கொள்வனவுப் பணிகள் மீளாய்வாண்டினது பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டினது பொருட் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், சகல பொருட் கொள்வனவுப் பணிகளும் முதலாம் காலாண்டில் ஆரம்பமாகி இரண்டாவது காலாண்டில் நிறைவு பெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், அநேக பணிகள் திட்டமிட்டவாறு முதலாம் காலாண்டில் ஆரம்பமாகியிராததால் இரண்டாவது காலாண்டில் பூர்த்தி செய்யப்பட முடியாது போனது. வருடாந்த மதிப்பீட்டில் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தும் அநேக பொருட் கொள்வனவுகள் ஆண்டின் இறுதி மாதத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவால் 2017 ஆம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட பொருட் கொள்வனவுப் பணிகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் பின்வருமாறு.

(i) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 பந்திகளின் பிரகாரம் ஒவ்வொரு பொருட் கொள்வனவிற்கும் பொருட் கொள்வனவுக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிராததன் காரணமாக பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.5.1(ஆ) மற்றும் (இ) மற்றும் 2.6.1(அ)(i) பந்திகளின் கீழ் காணப்படும் பொருட் கொள்வனவுக் குழுக்களினதும் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுக்களினதும் பொறுப்புகளும் கடமைகளும் நிறைவேற்றப்பட்டிராமை புலனாகியது. மேலும், 2.11.1, 2.11.2, 2.11.3(அ) பந்திகளின் பிரகாரம் பொருட் கொள்வனவுக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுக்களது கூட்டங்களுக்கான திகதியை நிர்ணயித்தல், வருகையைக் குறிக்கும் ஏடுகளைப் பேணுதல் மற்றும் கூட்ட அறிக்கைளை குறிப்பிட்ட மாதிரிப் படிவங்களின் பிரகாரம் தயாரித்தல் என்பன நடைபெற்றிருக்கவில்லை.

(ii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 ஆம் பந்தியின் பிரகாரம், ஆரம்ப கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தபோதும், தொடர்புடைய சகல கிரயங்களும் அதில் உள்ளடங்கியிராததால் வழிகாட்டிக் கோவையின் 4.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் அது திணைக்களத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(iii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்விகள் கோரப்படும்போது அதில் தெரிவு செய்யப்படுபவரது நேரடித் தகைமைகளை உறுதி செய்யக்கூடிய குறித்த நோக்குடனானதும் தகைமைகள் தொடர்பானதுமான தேவைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய போட்டியுடனான கூறுவிலைக் கோரல்களது அதி குறைந்த கால எல்லை 21 நாட்களாகியபோதும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட 8 பொருட் கொள்வனவுப் பணிகளுக்கும் 21 நாட்களுக்கும் குறைவான கால அவகாசமே வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தின் A மற்றும் H படிவங்களைக் கணனிமயப்படுத்தல் மற்றும் Scan செய்தல் தொடர்பான பொருட் கொள்வனவுப் பணிகளில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் இயன்றளவு விரைவில் கூறு விலைகள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டுவதுடன், பொருட் கொள்வனவுக் கைநூலின் 7 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கூறு விலைகளது செல்லுபடிக் காலத்தில் சராசரியாக 50 சதவீத காலத்துள் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவால் கூறு விலைகளின் பகுப்பாய்வு நிறைவு செய்யப்படவும் வேண்டும். அதற்கமைய, மேற்படி கூறு விலைப் பகுப்பாய்வு 45 நாட்களுக்குள் நிறைவு பெற வேண்டுமாயினும், இப்பணியில் ஏறக்குறைய 210 நாட்களாக நீண்ட காலம் கழிந்திருந்தது.

(ii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.7.1(ஆ) க்கமைய கூறு விலைகளைப் பரிசீலித்தல் மற்றும் விரிவான கூறு விலைப் பகுப்பாய்வு என்பன நடைபெற்றிராமை என்பன தொழில்நுட்ப பகுப்பாய்வு அறிக்கைகளைப் பரிசீலித்தபோது புலனாகியது. அவ்வாறே, கூறு விலைகளைப் பகுப்பாய்வு செய்கையில் தொழில்நுட்ப விடயப் பகுப்பாய்விலும் பார்க்க தொழில் சட்டம் கடைப்பிடிக்கப்படுதல் போன்ற காரணங்களுக்கே கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.19(ஆ) பந்தியின் பிரகாரம் பின் தகைமைகளைப் பெறும் சந்தர்ப்பம் தொடர்பாக கூறு விலைக் கோரல் ஆவணங்களில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டுமாயினும், அவ்வாறல்லாது தெரிவு செய்யப்பட்ட கூறு விலையாளருக்கு மாத்திரமே செயல்முறைப் பரிசீலனைக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.10.1(ஆ) பந்தியின் பிரகாரம் கூறு விலையாளர் ஒப்பந்தத்தை பயனுள்ளதாக நிறைவேற்றுவதற்கான ஆற்றலும் வளமும் உடையவர் என்பது உறுதி செய்யப்படவேண்டுமாயினும், மேற்படி சேவையை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திடமுள்ள வன், மென் அணிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவுடைய பதவியணியினர் போன்ற வளங்கள் போதுமானதாக உள்ளது என்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளமையையும் தொழில்நுட்பப் பகுப்பாய்வு அறிக்கையின் மூலம் உறுதியாகவில்லை.

(v) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.11.1 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழு கூறு விலைப் பகுப்பாய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்திருக்கவில்லை.

(vi) தரவுகளைக் கணனிமயப்படுத்தும்போது, 99.8 சதவீதம் தவறு அற்றவாறான நடவடிக்கைகளை கூறு விலையாளர் கொண்டிருத்தல் வேண்டுமென மாதிரி படிவங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், ஆற்றலைப் பரிசீலித்தல 02 சந்தர்ப்பங்களிலும் அதிக தவறுகளுடன் தரவுகள் கணனிமயப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஒரு சந்தர்ப்பத்தில் ஏறக்குறைய 10 சதவீத தவறுடன் தரவுகள் கணனிமயப்படுத்தப்பட்டிருந்தன. எனினும், அக்கூறு விலையாளர் வெற்றியடைந்த கூறு விலையாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மாதிரிப் படிவத்துக்கேற்ப குறைந்தது மற்றும் மாதாந்தம் 40,000 A மற்றும் H படிவங்களை கணனிமயப்படுத்தல் மற்றும் Scan செய்தல் என்பன நடைபெற வேண்டுமாயினும், 2017 ஏப்ரல் 01 முதல் 2017 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியின்போது மாதாந்தம் 28,622 எண்ணிக்கையிலானவை மாத்திரமே நிறைவடைந்திருந்தன. அந்த வினைத்திறனற்ற வேலை வழங்குதலின் காரணமாக 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஏறக்குறைய 400,000 A மற்றும் H படிவங்கள் கணனிமயப்படுத்தல் மற்றும் Scan செய்யப்படுதலின்றி மத்திய கோவைப் பிரிவின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(vii) முறையான திட்டமில்லாது நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் குறித்த பொருட் கொள்வனவுப் பணித் தாமதம் என்பன காரணமாக முன்னைய ஆண்டில் A, B, H, I, J படிவங்களைக் கணனிமயப்படுத்தல் மற்றும் ஸ்கேன் செய்தல் (Scan) சேவையை வழங்கிய நிறுவனத்திடமிருந்து 2006 பொருட் கொள்வனவு வழிகாட்டலிலிருந்து விலகியவாறு, 2016 ஏப்ரல் 01 தொடக்கம் 2017 மார்ச் 31 வரையான காலப்பகுதியின்போது அச்சேவையைப் பெற்று அதன் பொருட்டு ரூபா 3,978,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் மாவட்டத் தொழில் அலுவலக மட்டத்தில் இப்பணியை நிறைவேற்றும் பொருட்டு குறித்த தொழில் அலுவலகங்களில் தரவுகளைக் கணனிமயப்படுத்தும் எழுதுவினைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கு திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு 2016 செப்டம்பர் 26 ஆந் திகதிய தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு பரிந்துரை செய்திருந்தபோதும், அதனை முகாமைத்துவம் கவனத்தில் கொண்டிராமை கணக்காய்வின்போது புலனாகியது.

(உ) நிதியத்தின் ABH மாதிரிப் படிவங்களை அச்சிடுவதற்கான பொருட் கொள்வனவுப் பணி சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.1.1(அ) பந்தியின் பிரகாரம் மாதிரிப் படிவங்களும் கூறு விலை ஆவணங்களும் தயாரிக்கப்பட்டிராததுடன், அதன் காரணமாக பிணையை அதிகரித்தல், செயலாற்றல் பிணைமுறிக்குச் சலுகையைக் கோருதல், முற்பணத்தைக் கோருதல் போன்ற பல நிபந்தனைகளைச் சமர்ப்பித்த கூறு விலையாளரை வெற்றியாளராகத் தெரிவு செய்ய வேண்டியேற்பட்டது.

(ii) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.10.1(ஆ) பந்தியின் பிரகாரம் கூறுவிலையாளரது ஆற்றல் மற்றும் அவரது முன்னைய தகைமைகள் மற்றம் அனுபவம் என்பவற்றைத் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழு பகுப்பாய்வு செய்திருக்காததுடன், 2018 சனவரி 31 ஆந் திகதியளவில் ரூபா 6,387,500 கிரயத்தில் 800,000 ABH மாதிரிப் படிவங்களை முற்றாக வழங்குவதற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுமிருந்தது. எனினும், 2018 மார்ச் 02 ஆந் திகதியளவிலும் 208,000 மாதிரிப் படிவங்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததால் குறைந்த அளவினை நிவர்த்தி செய்வதற்காக கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது முன்னைய ஆண்டில் அச்சிடுவதற்கான கட்டளைகளை வழங்கியிருந்த நிறுவனத்தின் மூலம் 100,000 ABH மாதிரிப் படிவங்கள் ரூபா 799,000 க்கு அச்சிடப்பட்டிருந்தன.

**(ஊ) அங்கத்தவர்களது புகைப்படத்தையும் கைவிரல் அடையாளத்தையும் பெறுவதற்கான செயற்திட்டம் (3 ஆம் கட்டம்)**

---

அங்கத்தவர்களுக்கு வினைத்திறனுடனும் விசுவாசமானதுமான சேவைகளை வழங்கும் நோக்குடன் குறித்த செயற்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்கள் முறையே 2008/2009 மற்றும் 2010/2011 ஆண்டுகளில் அமுலாகியிருந்ததுடன், மூன்றாம் கட்டம் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவிருந்ததுடன் அது சம்பந்தமான அவதானிப்புகள் பின்வருமாறு.

(i) கிரய நலன் பகுப்பாய்வு (Cost Benefit Analysiis) மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொண்டு சிறந்த திட்டத்துடன் செயற்திட்டத்தின் முதலாம், இரண்டாம் கட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன், செயற்திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்குரிய செயற்திட்ட அறிக்கையும் செயற்திட்டத்தினது திட்டமும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், மூன்றாம் கட்டத்தை அமுலாக்குவதற்கு முன்னர் முதலாம், இரண்டாம் கட்டங்களது செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருந்தமைக்கான சான்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) செயற்திட்டத்தின் மூன்றாம் கட்டம் 2 பகுதிகளாக நிறைவேற்றப்படுவதற்கு மாதிரி வடிவங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், I ஆம் பகுதியின் கீழ் குறித்த உபகரணங்களைக் கொள்வனவு செய்வது மற்றும் II ஆம் பகுதியின் கீழ் புகைப்படங்களையும் கைவிரல் அடையாளங்களையும் பெறுதல் (Data Capture) என்பவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் இரு கட்டங்களையும் ஒரே நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கான கூறு விலையாளர் தெரிவு செய்யப்பட்டுமிருந்தார். அதற்கமைய, 2017 மே 15 ஆந் திகதி உபகரணங்களின் ஒரு பகுதி ரூபா 16,557,085 செலவில் 2017 மே 15 ஆந் திகதியன்று கொள்வனவு செய்யப்பட்டிந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் II ஆம் பகுதி சம்பந்தமாக அதற்கமைய முறையாக மதிப்பீடு தயாரிக்கப்படாமை, கூறு விலையாளர்களது ஆற்றலை பகுப்பாய்வு செய்வதற்கான குறித்த நோக்குடனான பகுப்பாய்வை இனங்கண்டு அதற்கேற்றவாறு பகுப்பாய்வை மேற்கொள்ளாமை, கலந்துரையாடல்களின்போது இணக்கத்திற்குள்ளாகிய விடயங்கள் சம்பந்தமாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஈடுபடாமை போன்ற செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கான உடன்படிக்கையில் ஈடுபடாமை போன்ற காரணங்களால் செயற்திட்டத்தை அமுலாக்க முடியாதிருந்ததுடன், 2018 மே 31 ஆந் திகதியளவிலும் மேற்படி உபகரணங்கள் களஞ்சியத்தில் பயனற்றவாறிருந்தன.

(iii) கூறு விலை ஆவணங்களின் பிரகாரம், குறித்த உபகரணங்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்தல் என்பவற்றிற்கு 90 சதவீதமும் 1000 அங்கத்தவர்களது புகைப்படங்களையும் விரல் அடையாளங்களையும் பெற்றுக் கொண்டதன் பின்னர் எஞ்சிய 10 சதவீதமும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமாயினும், உபகரணங்களை வழங்கியமை மாத்திரமே நிறைவேறியிருக்கையில் மொத்தப் பெறுமதியாகிய ரூபா 16,557,085 ஒரே தடவையில் வழங்கப்பட்டுமிருந்தது.

(iv) தேவைகளை முறையாக இனங்காணாதும் திட்டத்தை தயாரிக்காதும் நிதியேற்பாடு செய்யப்பட்டமையால் 2015 முதல் 2017 வரை மேற்படி செயற்திட்டத்தின் பொருட்டு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியில் 85 முதல் 100 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்ததுடன், 15 முதல் 100 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியுமிருந்தது.

(v) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.1(ஆ) பந்தியின் பிரகாரம் விடயம் தொடர்பாக நிபுணத்துவம் உடைய ஒருவர் தொழில்நுட்ப பகுப்பாய்வுக் குழுவில் உள்ளடக்கப்படாமையால் உபகரணங்களது (பொருட்களும் மென் அணிகளும்) இணங்கும் தன்மையையும் தரத்தையும் பரிசீலிப்பதற்கு அத்துறையில் விசேட அறிவுடைய ஒருவரது உதவியைப் பெற வேண்டியேற்பட்டது.

(vi) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.11.1 ஆம் பந்தியின் பிரகாரம், தொழில்நுட்ப பகுப்பாய்வுக்குழு பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரிக்க வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை.

### 6.3 உள்ளகக் கணக்காய்வு

ஊழியர் சேமலாப நிதியத்திற்கென சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டிராததுடன், இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினது உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தனியார் கணக்காய்வு நிறுவனம் மூலம் நடாத்தப்பட்டிருந்தது. நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 14 ஆகவும், உள்ளவாறான பதவியணி 08 ஆகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்தில் 57 பிரதேச அலுவலகங்கள் உள்ளதுடன் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களின் அளவுக்கேற்ப உள்ளவாறான எண்ணிக்கை போதுமானதாக இல்லாதிருந்தமையால் நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வில் அதிக கவனம் செலுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. திணைக்களததின் உள்ளகக் கணக்காய்வை சக்திமிக்கதாக்க வேண்டுமென 2013 முதல் தொடர்ச்சியாக அரசாங்க குழுக் கூட்டங்களில் பணிப்புரை விடுக்கப்பட்டபோதும், அதற்கமைய போதுமானளவு பதவியணியினரை இணைத்தவாறு கணக்காய்வை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 6.4 அரசாங்க கணக்குக் குழுவினது பரிந்துரைகளும் தற்போதைய நிலைமையும்

| பரிந்துரை இலக்கம் | பரிந்துரையும் தற்போதைய நிலைமையும் |
|---|---|
| (அ) 2016 ப்பெரவரி 26 ஆந் திகதிய 08 ஆம் இலக்கம் | ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்காக சகல நிறுவனங்களும் ஒருங்கிணைந்து எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கான முறையான திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டபோதும், 7 நிறுவனங்களது பங்களிப்புடன் நடைபெற்ற கூட்டங்களின்போது ஒவ்வொரு நிறுவனமும் அமைக்கப்பட்டுள்ள நோக்கம் வெவ்வேறாக உள்ளதால் அந்த நிறுவனங்களில் உள்ள தரவு முறைமை, நலனளித்தல் விதிமுறைகள், தகவல் தொழில்நுட்ப முறைமை என்பவற்றை ஒருங்கிணைக்கும் ஆற்றல் இல்லாது, ஊழியர் சேமலாப நிதியத்தின் எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கான திட்டத்தை அமுலாக்குவதை நோக்கமாகக் கொண்டு சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் ஆற்றல் இல்லாதிருப்பது புலனாகி இருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2016 பெப்ரவரி 26 ஆந் திகதிய 09 ஆம் இலக்கம் | நிதியத்தின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு தொழில் திணைக்களமும் மத்திய வங்கியும் இணைந்து கணனி நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான ஆற்றல் தொடர்பாக அறிக்கை ஒன்றை 2016 மார்ச் 23 ஆந் திகதிக்கு முன்னர் தொழிற்படு குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கி அரசிற்கு வழங்கும் கடனுக்கான நிதியேற்பாட்டின் கீழ் செயற்படும் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (Capital Market Development Programme) மூலம் தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார். |

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | அங்கத்தவர்களது கணக்குகளில் பங்களிப்புத் தொகையைச் செலவு வைத்தல் | நிதிய அங்கத்தவர்களது பிரத்தியேக கணக்குகளில் செலவு வைக்கப்படாதுள்ள பங்களிப்புத் தொகையைத் துரிதமாக அக்கணக்குகளில் செலவு வைப்பதற்கும் நிறுத்தி வைத்துள்ள நலன்களைக் குறித்த உரித்தாளர்களுக்குத் தாமதமின்றிக் கொடுப்பனவு செய்வதற்குமான வழிவகைகள் தயாரிக்கப்படாமை. |
| (ஆ) | முதலீட்டு முகாமைத்துவம் | அங்கத்தவர்கள் அதி கூடிய நலன்களைப் பெறும் விதத்தில் நிதியைச் சிறந்தவாறு முதலீடு செய்யாமை. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்விற்குப் போதுமானதும் தகைமை வாய்ந்ததுமான பதவியணியினரை ஆட்சேர்த்தல் மற்றும் சகல துறைகளையும் உள்ளடக்குமாறு உள்ளகக் கணக்காய்வு நடைபெறாமை |
| (ஈ) | வங்கிக் கணக்கிணக்கத்தைத் தயாரித்தல் | நெடுங்காலமாகத் தீர்வு செய்யப்படாதுள்ள கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை |
| (உ) | பொருட் கொள்வனவு | பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்கு ஏற்ப பொருட் கொள்வனவு நிறைவேறாமை. |